1346

ஓம்.

தத். ஸத்

ஸ்ரீ விலக்ஷணனந்தர்

அருளிச்செய்த

# தங்கவேஷம்

# தட்டாரவேஷம்

# நகாஸ்வேஷம்

இஃது

கரூர் மண்டி, மு. ஆ. வேங்கட்டரம
செட்டியார் அவர்களால்,

கரூர் சந்திரா அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

1926.

OFFICE OF THE REGISTRAR
10 SEP 19…
MADRAS

R6
N26
176643

ஓம்

தத். ஸத்

# தங்கவேலை

OFFICE OF THE REGISTRAR
10 SEP 1927
MADRAS

சகோதரர்களே!

அவரவர் கர்மானுசார ஈஸ்வர நியதிப்படி பிரபஞ்சத்திற் ஜனித்த நாமெல்லோரும் முதலிற் செய்யவேண்டியதென்னவென்றால்

தங்கவேலைதான்.

ஏனென்னில், தங்கள் தங்கள் வேலைகளைச் செய்துமுடிக்காதவன் மற்றெவ்வேலைகளைச் செய்துமுடிக்க வல்லவனாவான். ஆதலால் நாமனைவரும் முதலில் தங்கவேலை இன்னதென்றுதேடிவிசாரித்துக்கண்டு அனுஷ்டித்து அனுபவித்து ஆரூடமாக்கி அடையவேண்டியதற்குச் சாதகமான விஷயங்களைக்குறைவற அனுஷ்டித்து நடக்கவேண்டும்.

அதாவது:—ஆசாரிமார்கள் தங்கவேலை செய்ய ஆரம்பித்துக் தாதகநவென்று மின்னக்

176648

[illegible]ம் மாற்றுத்தங்கத்தை வாங்கிப் பட்ட ரையில் உருக்கி உலைத்து நருக்கி நிருத்து இருக்கி பெருக்கி அறுத்து நீட்டி மடக்கி சமப்படுத்தி காப்பு, ஜடபில்லை, நாகர், குண்டலம், மோதிரம், ஒட்டியாணம், காசுமாலை, அரைஞாள், தோடு முதலிய அருமையான நகைகள் செய்துவிடுகிறார்கள்.

அதுபோல நாமும் நமது ஆசாரியர்களான தக்ஷிணாமூர்த்தி, ஜனகாதி மஹரிஷிகள், வசிஷ்டர், வியாசர், நம்மாழ்வார், ஞான சம்பந்தர், சங்கரர், மத்துவர், இராமானுஜர், முதலியவர்களிடம் மாற்றில்லாத் தங்கத்தை வாங்கி மாற்றுமலப்படியே நிறுத்து முதலில் காப்புச்செய்யவேண்டும்.

## காப்பு.

கணபதி காப்பு, பிரமவிஷ்ணுருத்ர மகேஸ்வர சதாசிவ சுப்பிரமண்யர் முதலியோர்கள் காப்பு ஞானிகள், அடியார்கள் காப்பு, இவைகளை மிகநாகரீகமாகச்செய்து தனது அந்தரங்கக்கைகளில் அணிந்துகொள்ளவேண்டும், அதன்பின் ஜடபில்லை செய்தல்கூடும்.

397

RG
1426

## ஜடமில்லை.

ஜடம் என்பது சரீரம். அதாவது ஸ்தூலம், சூக்ஷமம், காரணம் எனச் சரீரம் மூன்று.

இதில் ஸ்தூலம், பாஞ்சபௌதிகவிகார அன்னமயகோசம்.

சூக்ஷமம், சத்துவ ராஜச, பிராணமய, மனோமய, விஞ்ஞானமயகோசம்.

காரணம், ஆத்திரவடிவ தமோகுண ஆனந்தமயகோசம்.

இம்மூன்று சரீரம் அல்லது ஐந்துகோசம், மூன்றவஸ்தை, முக்குணம். இவற்றுட்பட்டு விழித்திருப்பது ஜீவன். அதனப்பால் பிரகிருதி. அப்புறம் சூனியம். அப்பால்ஞானம். அதனப்புறம் திருபுடி. அதனினுமப்பால் அப்பியாசம். அதன்பின் அனுபவம். அதுவுங்கடந்ததே உள்ளுணர்வு. அப்புறந்தான் சாக்ஷாத்காரம். அதாவது ஆரூடம், பிரம்மம். தெய்வம், கடவுள், சிவம், வாசுதேவம், என்பது. இவற்றில்கடவுளை நோக்குங்கால் அனுபவாரூடம் ஜடம். அனுபவாரூடத்தை நோக்குமிடத்து உள்ளுணர்வு ஜடம். உள்ளுணர்வை நோக்குங்கால் அப்பாஸமே ஜடம்.

அப்யாசத்தைப் பார்க்கும்போது ஞானம் ஜடம். ஞானத்தை பார்க்குமிடத்து திருபுடி ஜடம். திருபுடியை ஆராயில் சூனியம் ஜடம். ப்ரகிருதியைப் பார்ப்போமானால் ஜீவன் ஜடம். ஜீவனை நோக்குமிடத்து காரணம் ஜடம். காரணத்தைப் பார்க்குங்கால் சூக்ஷ்மம். சூக்ஷ்மத்தைக் காட்டிலும் ஸ்தூலம் ஜடம். ஸ்தூலத்தை நோக்குங்கால் பிரபஞ்சம் ஜடம்.

இவ்வாறு ஜடநிரூபணம் சொல்லப்பட்டன. இவற்றின் பில்லையைத் தாங்கியிருப்பவர் பரமேஸ்வரன், அச்சடதாங்கியான பரமேஸ்வரனது சொரூபத்தை உள்ளவாறு தாங்கியிருப்பதே ஜடபில்லை செய்து தரித்துக் கொள்வதாகும். இனி நாகர்செய்ய ஆரம்பிக்கலாம்.

## நாகர்.

நாகன் என்பது ஆதிசேஷன். அதாவது சர்வ தத்துவங்களையுந்தள்ளிச் சேடித்திருப்பதே சேஷம் என்று பொருள். அவற்றை உடையவிரும்பி சரீரம், இந்திரியம், பிராணன், மனது, புத்தி, அஞ்ஞானம், மாயை,

176643

மூலப்பிரகிருதி, மதம், அகங்காரம், மத்துவம், ஜீவன், ஈஸ்வரன், முதலிய தத்துவங்களை நிபதிசெய்து அதனப்பாற் சேஷமான பரப்பிரஹ்ம ஐக்கியமடைதலே நாகர் செய்து அணிதலாகும். இனி குண்டலஞ் செய்ய ஆரம்பிக்கலாம்.

R6 N26

## குண்டலம்.

குண்டலியென்பது மூலாதாரத்தின் நடு மத்தியிலுள்ள ஓர் பிரமாதமான மயக்க சக்தி அச்சக்தியை அறியவிரும்பி இதைச்செய்து நாமணிவதே குண்டலம் செய்தணிவதென்பார், அதாவது இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி, இவ்வெட்டு யோகங்களையும் முறையே யதார்த்த குரு மஹானவர் முன்னிலையிலுபதேசித்துக்கொண்டு ஏகாந்த ஸ்தலத்தையடைந்து ஆகாரஞ்சுருக்கி ஆசனங் கட்டி உத்தரமுகமாய் நிமிர்ந்து பிரணவ சப்தத்துடன் அப்பியாசித்து நான்காவது பிராணாயாமம் முடிந்தபின் பிரத்தியாகார சமயம் உதிப்பது குண்டலினியாம். அக்குண்டலினி வெளித்தோன்றும்போது மிகுந்த பசியுண்

டாகும். அதிகமான உடல் வளைவு தோன்றும். அடிக்கடி பெருமூச்சு விடும். சகல இந்திரியங்களும் நடுங்கும். மனம் பதரும். ஜீவனிமிருங். இன்னும் பலவிதமான குறிகளுண்டாகும். இவைகளையெல்லாம் தனது தீரமனதிடத்தால் ஜெயித்து அதனப்பால் குண்டலினியைத் தன்வசப்படுத்தி அணிந்து கொள்ளுவதாகும் இதன் பின் மோதிரம் செய்ய ஆரம்பிக்கவேண்டும்.

## மோதிரம்.

சர்வதத்துவங்களையும் தனது திடத்தினால் மோதி நிலைக்காமலாக்கித் தூரத்தித் தனது திரத்தைக்காட்டி அதையே நாட்டி தன்னைக் கூட்டி தனது சுபாவ வீட்டிலிருந்துகொண்டு சர்வமத தத்துவ மோதிரத்தை அணிவதே மோதிரம்செய்தணிவதாகும். பின் ஒட்டியாணஞ்செய்ய ஆரம்பிக்கவேண்டும்

## ஒட்டியாணம்.

சமாதி அப்பியாசம் ஆரம்பிக்கும்போது மனது வசப்படுவதற்குச் சாதகமான பந்தங்கள் பலவுள்ளன. அவற்றில் ஒட்டியாண

பந்தகமென்றொன்றுண்டு. அதாவது நாசியின் உச்சியின் முடிவான சுழுமுனையில் மனதை யிருத்தி அப்பியாசிக்கமுடிவில் விளங்கும் அனுபவத்தைப் பந்திப்பதையே ஒட்டியாண பந்தகமென்பர். இனி காசுமாலை செய்ய வேண்டும்.

## காசுமாலை.

காசு என்பது செல்வம். அதன் மால் என்பது. அதாவது உலகவிஷபமான செல்வம் முதலியமயக்கங்களை அணியணியாகக் கோர்த்துத்தனது சுவானுபவக் கழுத்திலணிந்து கொள்ளுவதாகும். இக்காசுமாலை செய்பவர்களுக்குக்கூலி ரூபாய்ஏழு. அவை சுபேச்சை, விசாரணை, தனுமானசிசத்துவாபத்தி, அசம், சத்தி, பதார்த்தபாவனை, துரியம் என்னும் இவ்வேழுரூபாய்களாம். இதன்பின் அரைநாள் செய்தல் நன்று.

## அரைநாள்.

அரை நாள், கால் நாள், முக்கால் நாள், முழு நாள் முதலியநாள்கள். இன்னும் பல இருக்கின்றன. அதாவது, சப்தானுவித்த

சமாதி கால்நாள். சப்தானனுவித்த சமாதி அரைநாள். அத்வைதபாவனுரூபநிருவிகற்ப சமாதி முக்கால் நாள். அவஸ்தானுரூப நிருவிகற்ப சமாதி அல்லது அஸம்பிரக்ஞாத சமாதி முழுநாள்.

சகஜநிஷ்டையே பூரணநாள். இவற்றின் பிரிவுகளை இங்கு எழுதப்படவில்லை. இது செய்து முடிந்தபின் தோடு செய்ய ஆரம்பிப்பது நலம்.

## தோடு.

தோடு செய்பவர்கள் நயமான வெள்ளை, சிகப்பு முதலிய வஜ்ர, வைடூரிய, புஷ்பராக, கோமேதக, சிகப்பு முதலிய இரத்தினங்களை பதித்து ஸ்திரப்படுத்தித் தங்கத்திலாக்கித் தனது காதிலணிந்து கொள்ளுகிறதுபோல இங்கும் சாத்விககுண விலக்ஷணசமுதாய வெள்ளைக்கற்களையும், இராஜசகுணசிகப்புக் கற்களையும், நிருவிகற்பத்தால் ஸ்திரப்படுத்தி சகஜநிஷ்டையென்னுந் தங்கத்திலாக்கி அநுபவக் காதுகளிலணிவது என்பதொருபக்ஷம். பின்னும் தோடு என்பது உண்மையை மூடிக் கொண்டிருக்கும் ஓர்விதப்பொய் என்பது

பொருந்தும் அவையாவது, பருப்பை மூடியிருக்கும் சிரட்டை, சரீரத்தை மூடியிருக்கும் உடுப்புகள், உயிரை மறைத்துக்கொண்டிருக்கும் உடல், இவைகளைபோல யாதார்த்த வடிவ ஆண்மாவாயிருக்கப்பட்ட தன்னுடைய சொரூபத்தை மறைத்திருக்கின்றது. அதை யுணர்ந்து ஆண்மாவாகி நின்றுகொண்ட பின்னும் சரீரவடிவமறைப்பைத் தாங்கிக் கொண்டிருப்பதென்பதாம்.

இவ்வித மஹா அதியற்புதமான தங்க வேலைகளையெல்லாம் உண்மையான ஆசாரியரிடம் கேட்டுத் தெரிந்து அனுஷ்டித்து அடைதல் வேண்டும். இனித் தட்டாவேலை கூறுவாம்.

## தட்டாவேலை.

பிரபஞ்சத்திலுட்பட்ட எவ்வித பெரிய அரிய காரியங்களாலும் இடையிற்றடைபட்டுப்போகின்றன. யாதொரு தடையிமின்றிச் செய்யப்படுங் காரியமெதுவோ அதுவே தட்டாவேலையாம். நாமசெய்கிற வேலைகளில் தட்டுகிற வேலையொன்று, தட்டா வேலையொன்று, ஆக இரண்டிருக்கிறது. இவற்றில்

சூனியமும் அதனப்பாலுள்ள பிரஹ்மதரிசனத்தில் தடை படுகின்றன. பிரகிருதியும் அப்பிராகிருதத்தில் தடைபடுகிறது. அஞ்ஞானம் ஞானத்திலும் ஞானம் அஞ்ஞானத்தி[illegible] [illegible] பின் சர்வமத தெய்வங்களும், [illegible] ஆசாரியர்களும், சகல யோகமும், ஞானமும், கர்மமும், பக்தியும், தடைபட்டு நின்றுவிடுகின்றன. பின் எதற்கு மேல் இன்னொன்றில்லையோ, எதை அடைந்தபின் இன்னொன்றை அடைவதற்கு இடமில்லையோ அவ்வஸ்து ஒன்றுதான் ஒருவிஷயத்திலும் தடைபடுவதில்லையென்று நினைக்கிறேன். அவ்வஸ்து யாதென்று ஆராய்வோம்.

— திரிகாலத்திலும் யாராலும் தன்னையும் [illegible]டாமலிருப்பது எதுவினில், சர்வமத [illegible]

ஆதார பூதமானதும், சகல தத்துவசாக்ஷி சொரூபமாகியதும், சர்வபுவனவியாபார வஸ்துவாகியும், சர்வமத தேசகாலவஸ்து பரிச்சேதமற்றவராயும், இராநின்ற யாதொரு பரமாதமா, அதாவது, கடவுள் என்னுமொரு அவாங்கமனோகோசர வஸ்துவேயாம். இவ்வித அபாரக[illegible] சர்வ சக்தியுடைய பகவானொருவனே யாதொரு விஷயத்திலுந் தலைப்பட்டாக வேண்டியது சகல பிராணிகளாலும் ஒப்புக்கொள்ளப்பட்டது. ஆகையால் பரமாத்மாவை அல்லது கடவுளை அடைவது பிரஹ்மசொரூபத்தை அடைய வேண்டியசாதன வேலைகளுக்கும் அடையும் பொருட்டுச் செய்ய வேலைகளுக்கும் கட்டா வேலையென்றாத்தமாகும்.

இவற்றில் முதலில் கட்டாயவேலைகளை அறிய வேண்டிய வழி வழமான தங்கவேலைகளை செய்து அதனைப்பற்றி கட்டாவேலைசெய்ய ஆரம்பிக்க வேண்டும். ஏனெனில், முதலில் தங்கிய அப்பால் தங்காத இடைஞ்சன்று ஒன்றுந் தட்டாத இடைஞ்சன்று ஒழுங்குற்ற நிலமடைந்து கட்டாவேலைகளைக் கட்டாமற் செய்யவேண்டும். இனி இவ்விரண்டு வே

176643



களுக்கும் அவசியமாகவேண்டிய நகாஸ் வேலையைக்கூறுவாம்.

## நகாஸ் வேலை.

முதலில் ஓர் அப்பியாசி சமாதியை யதார்த்த சாதனசாத்திய சம்பந்தத்துடன் அப்பியாசித்து அவ்வப்பியாசத்தை முடிவான சகஸ நிஷ்டைக்குக் கொண்டுவருகிறான் அதுபோல, முதலாவது தங்க வேலைகளையெல்லாம் குறைவரச்செய்து அதற்குட்பட்டு அரைவேலைசெய்து அதனப்பால் ஊதி அதாவது, சுவாஸ பந்தனஞ்செய்து தட்டாமற் செய்யப்படுகிற தட்டா வேலைகளையும் திடமாக முடித்து பின்பு இவ்விரண்டு வேலைகளும் தன்னைவிட்டகலாதுஸ்திரப்படும் பொருட்டு நகாஸ் வேலையென்னும் சகஸ நிஷ்டையைப்பழகி நிற்க ஆரம்பித்து ஆத்ம சாக்ஷாத்காரமடைதல் வேண்டும் அவை [illegible]லகம் சரீரம், இந்திரியம், பிராணன், மனம், [illegible]தி, மதம், மமதை, அகங்காரம், அவித்தை, [illegible]ப, முக்குணம், ஞானம், சூன்யம், ஜீவன், [illegible]ரன், செய்மெ என்னும் இப்படிகளை [illegible]ிய தனிக கடைகயில் உதயமாகா

நின்ற நித்தியானந்தவடிவப்பொருளை அடையப் பழகவேண்டும். அப்படியே நெடுநாள் பழகி ஆத்மானந்தத்தை அடைந்து அதை நிரந்தரமனுபவித்து அதையுமறந்து ஆனந்த அனுபவத்தையுமறந்த நயமான நகாஸ் வேலையை அடிக்கடி மனதிற்கு அல்லது, ஜீவனுக்குச் செய்தல்வேண்டும். இவ்விதமாக முறையுடன் மும்முரமாகத் தனது சத்துவ மனதுடன் சகல நிஷ்டைக்குச் சார்பான தங்க வேலை, தட்டாவேலை, என்ற இவ்விரண்டு வேலைகளையும் அனுஷ்டித்துமுடிந்தபின் அவ்விரண்டு வேலைகளுக்கும் நகாஸ்வேலை என்னும் சகல நிஷ்டையைப் பழகி மிதமாக முதலிற்செய்து இவற்றின் அந்தரங்க மர்மங்களை உள்ளவாறு உணர்ந்துய்வீர்களென்று கூறியதாகும்.

இவைகளை விரிவாகக் கூறுவதற்கு தற்போது என் மனம் விரியவில்லையாதலால் இங்ஙனஞ் சுருக்கிக் கூறியதாமெனவறிக.

ஓம். தத். ஸத்.

Printed at the
"CHANDRA PRESS,"
KARUR.